# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1970 - 2016 ජූනි මස 03 වැනි සිකුරාදා - 2016.06.03

*1970 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1006 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1008 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க .-** பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2016, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

**மினுவாங்கொடை நகர சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையின் அலுவலர் சேவையின் III ஆம் தர வெற்றிடங்களை நிரப்புதல்

மேல் மாகாண அரச சேவையில் மினுவாங்கொடை நகர சபையில் தற்பொழுது வெற்றிடமாகியுள்ள கீழ் குறிப்பிட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளை உடைய மேல் மாகாண சபையினுள் நிரந்தர வதிவிலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்ட இல. | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் III | 01 | PLI/2016 | ரூபா 24,250-10×250-10×270-10×300-12×330-ரூ. 36,410 எனினும் அரச நி. சு. இ. 03/2016 இற்கு ஏற்ப அடிப்படைச் சம்பளம் ரூபா 14,234 தொகையும் அதற்குரிய இணைப்புக் கொடுப் பனவும் செலுத்தப்படும். (நான்காவது சம்பள படி முறைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை) | கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளுக்கு உட்பட்டு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளு டன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல். (இதில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.) |
| 2 | பணி/ கள ஊழியர் (அ. உ. சே. III) | 02 | PLI/2016 | ரூபா 24,250-10×250-10×270-10×300-12×330-ரூ. 36,410 எனினும் அரச நி. சு. இ. 03/2016 இற்கு ஏற்ப அடிப்படைச் சம்பளம் ரூபா 14,234 தொகையும் அதற்குரிய இணைப்புக் கொடுப் பனவும் செலுத்தப்படும். (நான்காவது சம்பள படி முறைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை) | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டுக்கு சித்தியடைந்து இருத்தல். |
| 3 | சுகாதார ஊழியர் (அ. உ. சே. III) | 01 | PLI/2016 | ரூபா 24,250-10×250-10×270-10×300-12×330-ரூ. 36,410 எனினும் அரச நி. சு. இ. 03/2016 இற்கு ஏற்ப அடிப்படைச் சம்பளம் ரூபா 14,234 தொகையும் அதற்குரிய இணைப்புக் கொடுப் பனவும் செலுத்தப்படும். (நான்காவது சம்பள படி முறைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை) | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டுக்கு சித்தியடைந்து இருத்தல். |

**2. பொதுவான தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) சிறந்த நற்பண்புகளுடன் சிறந்த தேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பப்படிவம் கோருவதற்கு முன்னர் மேல் மாகாண மாகாண சபையில் மினுவாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் நிரந்தர வதிவில் இருத்தல் வேண்டும்;
(4) குற்றவியல் தண்டனை விதிக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் தண்டனை பெற்றவரொருவராக இருத்தல் கூடாது.

**3. ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

(1) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய சம்பளத்துடன் கூடியது ;
(2) குறித்துரைக்கப்பட்ட சதவீதத்தில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சம்பள நிதியத்திற்கு பங்களிப்பினை செலுத்துதல் வேண்டும் ;
(3) ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றவர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் ;
(4) நேர்முகப் பரீட்சைக்காக சமுகமளிக்கின்ற விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் மற்றும் வாய்மொழி மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**4. சேவையின் நிபந்தனைகள்.-** நியமிக்கப்படுபவர்கள் இலங்கைத் தாபன விதிக் கோவை நிபந்தனைகள், மேல் மாகாண மாகாண சபையின் நிதிப்பிரமாணங்கள், மாகாண சபை ஒழுங்குவிதிகள் அல்லது மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது மினுவாங்கொடை நகர சபையினால் காலத்திற்குக் காலம் வெளியீடு செய்யப்படுகின்ற கட்டளைகளுக்கு ஏற்ப பணியாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**5. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.-** மேற்படித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளினால் தயார் செய்து அனுப்பப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப 2016.06.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம் பெற்ற பணிகளை அமுல்படுத்தும் அலுவலர், நகர சபை, மினுவாங்கொடை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பப படிவங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவத்துடன் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய கீழ் குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(4) அனுபவம் தொடர்பான சான்றிதழ் ;
(5) நற்சான்றுப் பத்திரம் இரண்டு.

இந்த விண்ணப்பப்படிவங்களைக் கோரும் சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பு செய்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்யாது விடல் அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்தல் தொடர்பான சகல அதிகாரம் மினுவாங்கொடை நகர சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம் பெற்ற பணிகளை அமுல்படுத்தும் அலுவலருக்கு உரியதாகும்.

எச். ஏ. எஸ். ரத்நாயக்க,
செயலாளர் மற்றும் அதிகாரம் பெற்ற
பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்,
மினுவாங்கொடை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
மினுவாங்கொடை,
2016, மே 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையின் மினுவாங்கொடை நகர சபையின்**
**........................ பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. (I) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(II) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
2. நிரந்தர வதிவு மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் : ஆண்/பெண் :----.
6. பிறந்த திகதி :-
வருடம் :----, மாதம் :----, திகதி :----.

7. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் போது இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. திருமணமானவர்/திருமணமாகாதவர்? :----.
9. இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பிலா? பதிவின் மூலமா? :----.
10. கல்வித் தகைமைகள் :- (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்).
(i) ---------------.
(ii) ---------------.
(iii) ---------------.
(iv) ---------------.
(v) ---------------.
(vi) ---------------.
11. (i) வேறு தகைமைகள் :----.
(ii) தொழில்சார் தகைமைகள் :----.
(iii) சேவை அனுபவம் :-----.
12. நீங்கள் தற்பொழுது இந்த நகர சபையில் சேவையில் ஈடுபட்டிருப்பின் தற்பொழுது வகிக்கும் பதவி :-
(i) நிரந்தரம்/சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த/பதில் கடமை என்பது பற்றி :----.
(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
14. நீங்கள் எப்பொழுதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கையின்படி உண்மையானதும், சரியானதும் என குறிப்பிடுகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் பொய்யான தகவலொன்று வழங்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் என்றும் மற்றும் நியமனம் பெற்றதன் பின்னர் பதவி நீக்கப்படுவேன் என்ற நிபந்தனைக்கும் உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6-180

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மாத்தறை பிரதேச சபை**

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைச் (நியதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தினால் வாசிக்கப்பட்டதும் 261 ஆம் அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரால் அமைக்கப்பட்டதும், 2013.10.25 ஆந் திகதிய 1834 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையினால் அனுமதித்துள்ளதாக 2014.10.17 ஆம் திகதிய இலக்கம் 1884/61 iv இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டதும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான துணைவிதி மற்றும் நுளம்புகள், நோய் பரப்பும் கிருமிகள் போன்றவற்றை அழிப்பது தொடர்பான துணைவிதியை ஏற்றுக் கொண்டு செயற்படுத்தப்பட மேற்குறித்த உள்ளூராட்சி நிறுவன (மேலதிக துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மாத்தறை பிரதேச சபையின் செயலாளர் ஆகிய என்னால் 2016.05.12 ஆம் திகதிய தீர்மான இலக்கம் 722 இன் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தீர்மானித்ததென இதன் மூலம் பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

பீ. ஜீ. பியல் ரனதேவ,
செயலாளர்,
மாத்தறை பிரதேச சபை.

2016, மே 17.

06-58/1

## மாத்தறை பிரதேச சபை

*அட்டவணை*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைச் (நியதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தினால் வாசிக்கப்பட்டதும் 261 ஆம் அதிகாரமாகிய 1952 இலக்கம் 6 உள்ளூராட்சி நிருவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தெண் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மானத்துறை பொருப்பமைச்சரால் அமைக்கப்பட்டதும், 2013.05.17. ஆம் திகதிய 1811 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையினால் அனுமதித்துள்ளதாக 2014.08.29 ஆம் திகதி இலக்கம் 1878 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசரிக்கப்பட்டதும், ஏற்றுக் கொள்ளப்பட்ட துணைவிதிகளில்*

(i) *அணைத்து மேலதிக துணைவிதிகளுக்கு ஏற்ப வரைவிளக்கம் தொடர்பான மேலதிக துணைவிதி.*
(ii) *அணைத்து மேலதிக துணைவிதிகளுக்கு ஏற்ப பொது ஒழுங்குவிதிகள் தொடர்பான மேலதிக துணைவிதி.*
(iii) *ஏதாவது மேலதிக துணைவிதியின் ஒழுங்குகள் மற்றும் விதிகள் போன்றவற்றை மீறுதல் தொடர்பாக தண்டனை வழங்கும் மேதிக துணைவிதி*
(xviii) *மரணச் சடங்குகள் சேவை தொடர்பான மேலதிக துணைவிதி*
(xix) *நடமாடும் வியாபாரிகள் உணவப் பண்டங்கள் விற்பணை தொடர்பான மேலதிக துணைவிதி*
(xx) *வாகனம் நிறுத்துதல் வீதிகளின் போக்குவரத்திற்கு தடை புரிதலைத் தடுத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி*
(xxi) *வீதிகளை நஷ்டப்படுத்தல் வீதிகளின் போக்குவரத்திற்கு தடைபுரிதலைத் தடுத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி*
(xxii) *விளையாட்டு மைதானம் தொடர்பான மேலதிக துணைவிதி*
(xxiii) *சமூக நிலையங்கள் தொடர்பான மேலதிக துணைவிதி*

*இது தொடர்பான தீர்மாணங்களை வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரித்த திகதியிலிருந்த ஏற்றுக் கொண்டு செயற்படுத்த மேற் குறித்த சரத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மாத்தறை பிரதேச சபை தீர்மானித்துள்ளது. 261 ஆம் அதிகாரத்தின் 1952 ஆம்ஆண்டின் 6 ஆம்இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2016.05.12 ஆம் திகதி மாத்தறை பிரதேச சபையின் 2016.05.12 ஆம் திகதி மாத்தறை பிரதேச சபையின் தீர்மான இலக்கம் 723 இன் கீழ் ஏற்றுக் கொண்ட வர்த்தமானியில் பிரசுரித்த திகதியிலிருந்து செயற்பட பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*பீ. ஜீ. பியல் ரனதேவ,*
*செயலாளர்,*
*மாத்தறை பிரதேச சபை.*

*2016, மே 17.*

*06-58/ 2*

---

## லுனுகம்வெஹெர பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத் துணைவிதி) சட்டவரைபின் 3 வது பிரிவின் (1) வது உப பிரிவின் 261 வது அதிகாரத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய லுனுகம்வெஹெர பிரதேச சபையில் 2016.04.29 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை வகுகத்திடல் குழுக்கூட்டத்தின் இலக்கம் 04 வது சிபார்சுக்கு அமைய பின்வரும் அட்டவணைக்குரிய பிரேரணை ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக இத்துடன் பொதுமக்களுக்கு அறிவித்தல் செய்யப்படுகிறது.*

*பீ. ரோஹினி ஜயலத்*
*செயலாளர்*
*லுனுகம்வெஹெர பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*லுனுகம்வெஹெர,*
*2016, மே 10.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விதிமுறைகள்) சட்டவாக்கின் 2 வது பிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பந்தியுடன் மொழிய்ப்படவேண்டிய 261 வது அதிகாரத்தின் 1952 ஆம் ஆண்டின் 6 வது உள்ளூராட்சி மன்ற (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டவாக்கின் 2 வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ தென் மாகாண, பிரதேசசபை உள்ளூரட்சிமன்ற விடயதான அமைச்சுக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக் கமைய, அவரினால் தயார்படுத்தப்பட்டதும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1834 இலக்க 2013.10.25 திகதிகொண்ட வர்த்தமானியின்*

iv (அ) பகுதியில் அறிவிக்கப்பட்டதுமான தென் மாகாண சபையில் 2014.08.12 நடைபெற்ற மாகாணசபைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டு 2014.10.17 ஆந் திகதி 1884/61 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்மூலம் வெளியிடப்பட்ட நிறைவேற்றுத் துணைவிதியான தென் மாகாணத்தில் பிரதேசசபை அதிகார எல்லைக்குள் திண்மக் கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பான நிறைவேற்றுத்துணைவிதியின் பிரகாரம் நுளம்பு மற்றும் நோய்தொற்றுக் கிருமிகள் அழித்தொழித்தல் தொடர்பான நிறைவேற்றுத் துணைவிதி லுனுகம்வெஹெர பிரதேச சபையினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு லுனுகம்வெஹர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நலைமுறைப் படுத்துவதற்கு மேற்குறிப்பிடப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டவாக்கின் 3வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ லுனுகம்வெஹெர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

6-143

---

## அங்குணுகொல பெலஸ்ஸ பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 வது இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத் துணைவிதி) சட்டவரைபின் 3 வது பிரிவின் (1) வது உப பிரிவின் 261 வது அதிகாரத்தின் கீழ் மொழியப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அங்குணுகொல பெலஸ்ஸபிரதேச சபையில் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை வகுத்திடல் குழுவின் சிபார்சுக்கமைய பின்வரும் அட்டவணைக்குரிய பிரேரணை அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபை செயலாளரினால் 139 வது இலக்கத் தீர்மாணமாக ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக இத்துடன் பொதுமக்களுககு அறிவித்தல் செய்யப்படுகிறது.

ஏ. பீ. வயலட்,
செயலாளர்,
அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அங்குணுகொலபெலஸ்ஸ,
2015, திசெம்பர் 10.

### தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விதிமுறைகள்) சட்டவரைபு மற்றும் 261 வது அதிகாரத்தின் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டவாக்கின் 2 வது சரத்தின் (1) வது உப பிரிவின் கீழ் மொழியப்படுகின்ற உள்ளூராட்சிமன்ற விடயதான அமைச்சுக்கு உள்வாங்கப்பட்டதும் தயார்படுத்தப்பட்டதும் 2013, மே 17ஆந் திகதிய இலக்கம் 1811 இன் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமானதும் தென்மாகாண சபையால் அங்கீகரிக்னகப்பட்டு 2014.08.29 ஆந் திகதி 1878 வது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டதுமான நிறைவேற்றுத் துணை விதிகளில் xxvii ஆம் பிரசசார விளம்பர துணை விதி நீங்கலாக i முதல்xxix வரையிலான பின்வரும் அட்டவணையில் இடம் பெறுகின்ற ஏனைய துணை விதிகள் யாவும் (நிறைவேற்றுத்துணை விதிகளின் 3 வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைப்பபடும் என்று அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

| | |
|---|---|
| i வது பிரிவு | - சகல நிறைவேற்றுத்துணை விதிகளுக்குரிய தொடர்பான வரைவிலக்கணம் தொடர்பான துணை விதி |
| ii வது பிரிவு | - சகல நிறைவேற்றுத் விதிகளுக்குரிய தொடர்பான பொது நடைமுறை தொடர்பான துணை விதி |
| iii வது பிரிவு | - ஏதாவது துணைவிதியின் நடைமுறைகளும் நியமனங்களும் மீறுதல் தொடர்பான தண்டனைக்குரிய துணைவிதி |
| iv வது பிரிவு | - மீன் விற்பனை தொடர்பான துணை விதி |
| v வது பிரிவு | - இறைச்சி விற்பனை தொடர்பான துணை விதி |
| vi வது பிரிவு | - குளிர்பான உற்பத்திசாலை தொடர்பான துணை விதி |
| vii வது பிரிவு | - தலைமுடி அலங்கார நிலையம், தலைமுடி தரித்தல் நிலையம் மேனிஅலங்கார நிலையம் தொடர்பான துணை விதி |
| viii வது பிரிவு | - வெதுப்பகம் தொடர்பான துணை விதி |
| ix வது பிரிவு | - பால்ப் பண்ணை தொடர்பான துணை விதி |
| x வது பிரிவு | - நீச்சல்தடாகம் தொடர்பான துணை விதி |
| xi வது பிரிவு | - பணிக்கட்டிடித்தொழிற்சாலை தொடர்பான துணை விதி |
| xii வது பிரிவு | - சாப்பாட்டுக்கடை, உண்டிச்சாலை, தேனீர் கடை தொடர்பான துணை விதி |
| xiii வது பிரிவு | - ஹோட்டல் தொடர்பான துணை விதி |
| xiv வது பிரிவு | - தங்குமிடம் வழங்குமிடம் தொடர்பான துணை விதி |
| xv வது பிரிவு | - சலவையகம் தொடர்பான துணை விதி |
| xvi வது பிரிவு | - தொழிற்சாலை தொடர்பான துணை விதி |
| xvii வது பிரிவு | - ஈமக்கிரியை வசதி வழங்குதல் தொடர்பான துணை விதி |
| xviii ஆவது பிரிவு | - உணவுப் பொருள் விற்பனை செய்யும் நடமாடும் வியாபாரிகள் தொடர்பான துணைவிதி |
| xix வது பிரிவு | - பாதசாரி கடவையிடம் தொடர்பான துணை விதி |
| xx வது பிரிவு | - கட்டப்பொருள்சார்ந்த தொழிற்சாலை, கட்டப்பொருள் களஞ்சியநிலையம், ஒழுங்குபடுத்துதல், பரிசீலனை செய்தல் நடைமுறைப்படுத்தல், தொடர்பான துணை விதி |

| | |
|---|---|
| xxi வது பிரிவு | - வாகனங்கள் தரித்திருத்தல் இயக்குதல் தொடர்பான துணை விதி |
| xxii வது பிரிவு | - பாதைகளை சிதைத்தல், பாதை போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்துதல் தடைசெய்தல் தொடர்பான துணை விதி |
| xxiii வது பிரிவு | - தகனநிலையம் முறைமைப்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல், அறவிடுதல் முறைமைப்படுத்தல் தொடர்பான துணை விதி. |
| xxiv வது பிரிவு | - பொதுச்சந்தை நடாத்துதல் தொடர்பான துணை விதி |
| xxv வது பிரிவு | - விளையாட்டு மைதானம் தொடர்பான துணை விதி |
| xxvi வது பிரிவு | - சனசமூகநிலையம் தொடர்பான துணை விதி |
| xxvii வது பிரிவு | - ஈடு, ஈடுவைப்போர் பதிவுசெய்தல் தொடர்பான துணை விதி |
| xxviii வது பிரிவு | - தவணையறிக்கை மற்றும் தகவல் தொடர்பான துணை விதி |

*6-179*